**தமிழ்நாடு அரசு**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

**வட்டாட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் வட்டம், சிவகங்கை மாவட்டம்**

அறிவிக்கை எண் : 01/2025 நாள் :23.07.2025

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் காலியாக உள்ள 09 கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்வதற்காக தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

அ). விண்ணப்பம் செய்வதற்கு கடைசி நாள் : 24.08.2025 (மாலை 5.45 மணி வரை)

ஆ). ஊதிய விகிதம் : சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 - 35,100/-

2. விண்ணப்பிக்க தகுதிகள் :

1. கல்வித் தகுதி : தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ் தேர்வில் ( SSLC - Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (தேர்ச்சி/தோல்வி). (குறிப்பு : SSLC - Secondary School Leaving Certificate Examination மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்). தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
2. வயது : 01.07.2025 அன்று அனைத்து பிரிவினருக்கும் குறைந்தபட்சம் 21 வயது அட்டவணை வகுப்பினர், அட்டவணை வகுப்பினர் (அருந்ததியனர்)/பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் / பிற்பட்ட வகுப்பினர்/ பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகபட்சம் 37 வயது பொது பிரிவினருக்கு அதிகபட்சம் 32 வயது. . மாற்றுத்திறனாளி அதிகபட்ச வயது 10 ஆண்டுகள் கூடுதல் தளர்வு வழங்கப்படும். முன்னாள் இராணுவப் பொதுப்பிரிவினருக்கு அதிகபட்சம் 50 வயதும் , இதர பிரிவினருக்கு (அட்டவணை வகுப்பினர், அட்டவணை வகுப்பினர் (அருந்ததியினர்)/பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் / பிற்பட்ட வகுப்பினர்/ பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்)) அதிகபட்சம் 55 வயதும் வழங்கப்படுகிறது.
3. பணியிடம் காலியாக உள்ள கிராமம்/ வட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**III இதர தகுதிகள்:**

1. விண்ணப்பதாரர் திருப்பத்தூர் வட்டத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. மிதிவண்டி/இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதும் திறன்
3. தெரிவு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும், முந்தைய குற்றப்பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து, திருப்தி அடைய வேண்டும்.
4. அடிப்படை விதி 10-ன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
5. தேர்ந்தெடுக்கப்படுபவரின் மனைவியோ/கணவரோ உயிரோடு இருக்கும் போது, வேறொரு திருமணம் செய்திருக்கக் கூடாது.

**IV காலிப்பணியிடங்கள்:**

**நிரப்பப்படவுள்ள கிராமங்களின் விவரம்**

| வ. எண் | கிராமம் | சுழற்சி எண் | இனச்சுழற்சி | பொது ஆண்/ பெண் | முன்னுரிமை |
|---|---|---|---|---|---|
| 1. | 86.பெரிச்சிகோவில் | 60 | பிற்படுத்தப்பட்டோர்/பொது/ முன்னுரிமைபெற்றவர் (Backward Class / General Turn / Priority) | பொது | முன்னுரிமை பெற்றவர் (PRY) |
| 2. | 37.துவார் | 61 | பகிரங்கபோட்டி/பெண்/ முன்னுரிமையற்றவர் (OC / Woman / Non Priority) | பெண் | முன்னுரிமையற்றவர் (NP) |
| 3. | 59.தென்மாபட்டு | 62 | தாழ்த்தப்பட்டோர்/பொது/ முன்னுரிமையற்றவர்/முன்னாள் இராணுவத்தினர் (Scheduled Caste / General Turn / Ex-serviceman) | பொது | முன்னுரிமையற்றவர் (NP) முன்னாள் இராணுவத்தினர் (EX- SERVICE MAN) |
| 4. | 58.வாணியங்காடு | 63 | மிகவும்பிற்படுத்தப்பட்டடோர் /சீர்மரபினர்/பொது/ முன்னுரிமையற்றவர் (MBC / DNC / General Turn / Non Priority) | பொது | முன்னுரிமையற்றவர் (NP) |
| 5. | 84.கீழபட்டமங்கலம் | 64 | பிற்படுத்தப்பட்டோர்/பொது/ முன்னுரிமையற்றவர் (Backward Class / General Turn / Non Priority) | பொது | முன்னுரிமையற்றவர் (NP) |
| 6. | 88.கள்ளிப்பட்டு | 65 | பகிரங்கபோட்டி/பொது/ முன்னுரிமையற்றவர் (OC / General Turn / Non Priority) | பொது | முன்னுரிமையற்றவர் (NP) |

Scanned with OKEN Scanner

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | 89.செவரக்கோட்டை | 66 | தாழ்த்தப்பட்டோர்/அருந்ததியர்/பொது/ முன்னுரிமையற்றவர் ( SCA / General Turn / Non Priority) | பொது | முன்னுரிமையற்றவர் (NP) அருந்ததியர் (SCA) |
| 8. | 30.கருப்பூர் | 67 | மிகவும்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர்/பொது/ முன்னுரிமையற்றவர் (MBC / DNC / General Turn / Non Priority) | பொது | முன்னுரிமையற்றவர் (NP) |
| 9. | 56.இரணசிங்கபுரம் | 68 | பிற்படுத்தப்பட்டோர்/பெண்/ முன்னுரிமையற்றவர் (BC / Woman / Non Priority) | பெண் | முன்னுரிமையற்றவர் (NP) |

விண்ணப்பிக்கும் முறை

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை சிவகங்கை மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் https://sivaganga.nic.in -இல் பதிவிறக்கம் செய்து. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் திருப்பத்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம். காலம் கடந்து வரும் எந்த விண்ணப்பங்களும் ஏற்கப்பட மாட்டாது.

குறிப்பு:

1. கூடுதல் விவரங்களுக்கு https://sivaganga.nic.in என்ற இணையதளத்தினை பார்க்கவும்.
2. தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி/இருசக்கர வாகனம் ஓட்டும் திறன்/வாசித்தல்/எழுதுதல் திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

23/7/24

வருவாய் வட்டாட்சியர்,
திருப்பத்தூர்.